www.kalvisolai.com

Sep - 2012

**1601**

Register Number | | | | | |

## பகுதி I — தமிழ் — முதல் தாள்

( செய்யுளும், இலக்கணமும் )

## Language — Part I — TAMIL — Paper I

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

குறிப்பு : i) விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

ii) வினா எண் VI க்கான விடைகள் மட்டும் செய்யுள் வடிவில் அமைதல் வேண்டும்.

I. பின்வரும் வினாக்களுள் எவையேனும் *நான்கனுக்கு* மட்டும் ஒவ்வொன்றிற்கும் ஐந்து வரிகளில் விடை எழுதுக : 4 × 2 = 8

1. நாம் தூங்கிக் கிடந்ததால் நிகழ்ந்ததென்ன ?

2. புறநானூற்றால் அறியப்படும் செய்திகள் யாவை ?

3. திருவள்ளுவருக்கு வழங்கும் வேறு பெயர்கள் சிலவற்றைக் கூறுக.

4. வளன் செனித்த படலம் உரைப்பது யாது ?

5. கலம்பகம் - பெயர்க்காரணம் தருக.

6. உமறுப்புலவர் சீறாப்புராணம் எழுதத் துணைபுரிந்த வள்ளல்கள் யாவர் ?

[ Turn over

www.kalvisolai.com



II. பின்வரும் வினாக்களுள் எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் ஒவ்வொன்றிற்கும் பத்து வரிகளில் விடை எழுதுக : 3 × 4 = 12

7. இந்தியர் அனைவரும் எவ்வெண்ணத்தைக் கைக்கொள்ளல் வேண்டும் ? ஏன் ?

8. அகநானூறு பற்றிக் குறிப்பு வரைக.

9. வினைத்திட்பத்தின் சிறப்பைத் திருவள்ளுவர் எங்ஙனம் காட்டியுள்ளார் ?

10. 'களிநடம் புரியக் கண்டேன்' என்று அனுமன் உரைத்தவற்றை எழுதுக.

11. தாவீதன் கோலியாத்துக்கு உரைத்த மறுமொழி யாது ?

III. பின்வரும் வினாக்களுள் எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் ஒவ்வொன்றிற்கும் பத்து வரிகளில் விடை எழுதுக : 3 × 4 = 12

12. இராசராச சோழனின் வில், வாள், முரசு, கொடி, குடை குறித்துக் கூறப்பட்டன யாவை ?

13. தலைவி மேகத்திடம் மொழிந்த தூதுமொழிகள் யாவை ?

14. சுரதா 'ஓர் உவமைக் கவிஞர்' என்பதை அவர்தம் பாடல்களிலிருந்து சான்று காட்டி விளக்குக.

15. குலசேகர ஆழ்வார் வேண்டுவதும், வேண்டாததும் யாவை ?

16. மணிமேகலா தெய்வம் புத்தபிரானைப் போற்றி செய்ததை யாங்ஙனம் ?

IV. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் **ஒன்றனுக்கு** இருபது வரிகளில் விடை எழுதுக. 1 × 8 = 8

17. 'அறிவுடைமை' என்னும் அதிகாரத்தில் தெரிவிக்கப் பெற்றுள்ள கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

18. கண்ணகியின் சூளுரையும் நகர்மாந்தர் மயங்கிக் கூறியுள்ள செய்திகளையும் தொகுத்து எழுதுக.

19. மூலையில் கிடக்கும் வாலிபனிடம் தாராபாரதி கூறும் அறிவுரைகளைத் தொகுத்து எழுதுக.

www.kalvisolai.com



V. பின்வரும் செய்யுளடிகளின் கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக. 4 × 1 = 4

20. "கயன்முள் அன்ன நரைமுதிர் திரைகவுட்
பயனில் மூப்பிற் பல்சான் றீரே" —

அ) இப்பாடல் அடிகள் இடம்பெற்ற நூல் எது ?

ஆ) இப்பாடலின் ஆசிரியர் யார் ?

இ) 'கயன்முள்' எதற்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளது ?

ஈ) 'திரைகவுள்' என்பதன் பொருள் யாது ?

*அல்லது*

21. "கொழுத்தபுகழ் உமக்குண்டு கொண்டு வந்தால் !
சொனை கொடுத்த தாகும்இந் நாட்டுக் கென்றாள்"

அ) கொழுத்த புகழ் யாருக்கு வரும் ?

ஆ) எதைக் கொண்டுவரப் பணித்தாள் ?

இ) இச்செய்யுளடிகள் இடம்பெற்ற நூல் எது ?

ஈ) இது யாருடைய கூற்று ?

VI. 22. "கண்டனென்" எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடலை அடிபிறழாமல் எழுதி அதன் பாவகையையும் எழுதுக. 4 + 2 = 6

23. "எண்பொருள" எனத் தொடங்கும் திருக்குறளையும் "நன்று" என முடியும் திருக்குறளையும் அடிபிறழாது எழுதுக. 2 + 2 = 4

VII. 24. எவையேனும் இரண்டு சொற்களுக்கு உறுப்பிலக்கணம் தருக. 2 + 2 = 4

அ) சிறந்து ஆ) புக்கேன் இ) ஓம்புமின்

ஈ) நடந்தனை உ) விடுவோர் ஊ) சுருங்கிய.

[ Turn over

www.kalvisolai.com



25. பின்வரும் கீழ்க் கோடிட்ட தொடர்களுள் எவையேனும் ***மூன்றனுக்கு*** இலக்கணக் குறிப்பு எழுதுக. 3 × 2 = 6

அ) <u>விக்கி விக்கி</u> ஆ) <u>கருஞ்சிகரம்</u>

இ) <u>நாழிகைவாரம்</u> ஈ) <u>தருவார்</u>

உ) <u>வைவேல்</u> ஊ) <u>ஒரீஇ</u>.

26. எவையேனும் ***இரண்டு*** தொடர்களுக்குப் புணர்ச்சி விதி தருக. 2 × 2 = 4

அ) முதுமரம் ஆ) யாருமில்லை இ) மதியெறிந்து

ஈ) பூங்கொடியாள் உ) கொத்துப்பூ ஊ) மண்ணரசு.

27. சான்று தந்து விளக்குக. 1 × 4 = 4

பொதுவியல் திணை அல்லது வரைவு நீட்டித்தவிடத்துத் தலைமகள் தோழிக்கு சொல்லியது

28. "இன்மையு ளின்மை விருந்தொரால் வன்மையுள் 1 × 4 = 4

வன்மை மடவார்ப் பொறை"

- இக்குறட்பாவில் அமைந்த அணியைச் சுட்டுக.

***அல்லது***

சொற்பொருட் பின்வரு நிலையணி அல்லது உருவக அணியை சான்றுடன் விளக்குக.

VIII. பொருத்துக : 4 × 1 = 4

| | திணை | | ஆசிரியர் |
|---|---|---|---|
| 29. | குறிஞ்சி | — | ஓரம் போகியார் |
| 30. | முல்லை | — | அம்மூவனார் |
| 31. | மருதம் | — | ஓதலாந்தையார் |
| 32. | நெய்தல் | — | கபிலர் |
| | | — | பேயனார். |

www.kalvisolai.com



IX. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக : 16 × 1 = 16

33. தமிழரசி குறவஞ்சியின் பாட்டுடைத் தலைவன்

அ) சிவன்

ஆ) திருமால்

இ) முருகன்.

34. புறநானூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள துறைகள்

அ) 11

ஆ) 65

இ) 75.

35. அகநானூற்றுப் பாக்களின் அடிவரையறை

அ) 4 அடி முதல் 8 அடி வரை

ஆ) 9 அடி முதல் 12 அடி வரை

இ) 13 அடி முதல் 31 அடி வரை.

36. திருக்குறளில் அமைந்துள்ள இயல்கள்

அ) 4

ஆ) 9

இ) 30.

37. வரி என்பது .................... வகையது.

அ) சந்தப்பாடல்

ஆ) இசைப்பாடல்

இ) கலிப்பாடல்.

www.kalvisolai.com



38. 'தனையை'யென்ற சொல்லின் பொருள்

அ) அம்மா

ஆ) உடன்பிறந்தாள்

இ) மகள்.

39. தேம்பாவணி நூலின் பாட்டுடைத் தலைவர்

அ) சூசைமாமுனிவர்

ஆ) இயேசு பெருமான்

இ) தாவீதன்.

40. 'புலன்' என்னும் இலக்கிய வகை

அ) கலம்பகம்

ஆ) பள்ளு

இ) உலா.

41. சாகித்திய அகாதெமிப் பரிசு பெற்ற நூல்

அ) பிசிராந்தையார்

ஆ) பாண்டியன் பரிசு

இ) குடும்ப விளக்கு.

42. செந்தமிழைச் செழுந்தமிழாகக் காண விரும்பியவர்

அ) பாரதியார்

ஆ) பாரதிதாசன்

இ) கம்பதாசன்.

www.kalvisolai.com



43. தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் தமிழன்னை விருது பெற்ற கவிஞர்

அ) அப்துல் ரகுமான்

ஆ) சுரதா

இ) தாராபாரதி.

44. பாஞ்சாலி சபதத்தில் உள்ள சருக்கங்களின் எண்ணிக்கை

அ) 5

ஆ) 7

இ) 9.

45. சுந்தரர் தேவாரம்

அ) முதலாந்திருமுறை

ஆ) ஏழாந்திருமுறை

இ) பன்னிரண்டாந்திருமுறை.

46. 'கிறித்துவக் கம்பர்' என்றழைக்கப்பட்டவர்

அ) கம்பர்

ஆ) வீரமாமுனிவர்

இ) எச். ஏ. கிருஷ்ணப் பிள்ளை.

47. கவிச்சக்கரவர்த்தி, கவிராட்சசன் என்றெல்லாம் புகழப்படுபவர்

அ) கம்பர்

ஆ) ஒட்டக்கூத்தர்

இ) இளங்கோவடிகள்.

www.kalvisolai.com



48. இராமன் கொடுத்ததாகச் சீதையிடம் அனுமன் காட்டியது

அ) கணையாழி

ஆ) அணிமணிகள்

இ) கடிதம்

X. கோடிட்ட இடங்களை ஏற்ற சொற்களால் நிரப்புக : 2 + 2 = 4

49. எந்நன்றி ................ உய்வுண்டாம் உய்வில்லை

செய்ந்நன்றி ................ மகற்கு.

50. எவ்வ துறைவ ................ முலகத்தோ

டவ்வ ................ தறிவு.